அதனைத் தொடர்ந்து பள்ளிக்கு வருகை புரியம் மாணவர்களுக்கு அவர்களுடைய மடிக்கணினியில் பதிவிறக்கம் செய்து தரவேண்டும். எனவே அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும். இப்பணி மிகவும் இன்றியமையாதது என்பதால் எவ்வித சுணக்கமுமின்றி பணிகளை மேற்கொண்டு மாணவர்களுக்கு பதிவிறக்கம் செய்து தரவேண்டும்.

மேற்கண்ட அறிவுரைகளை அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்குத் தெரிவித்து உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பள்ளிக் கல்வி இயக்குநர்

பெறுநர்
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்

நகல்

அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, தலைமைச் செயலகம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**ந.க.எண்.3254/ஆ3/2020, நாள் 13.07.2020**

(நகல்) தகவலுக்காகவும், தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்பொருட்டும் அனுப்பப்படுகிறது.

பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளில் தெரிவித்துள்ள Video Lesson பதிவிறக்கம் செய்தல் சார்பான அறிவுரைகளை பின்பற்றி எவ்வித சுணக்கமும் இன்றி பணியினை மேற்கொள்ளும்படி அனைத்து அரசு/ அரசு உதவிபெறும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

13.07.20

முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
அனைத்து அரசு/ அரசு நிதியுதவிபெறும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள்.